# Speech on SARCASM by Mrs. Vijaya Narayanan

**கேலி அருளுக்குப் பரம எதிரி.**

**வருவதைப் பெறுபவர் கேலிசெய்தபின் வந்ததாக வரலாறில்லை. அது அவருக்கு மட்டுமன்று. அவர் சந்ததிக்கே வாராது:**

. கேலி என்பது எதிர்ப்பின் வகைகளில் முடிவானது –

1) பாராமுகம் 2) எதிர்ப்பு 3) கேலி- எழுந்தால் எதிர்ப்பு மும்முரமாக இருப்பதாக அர்த்தம். அதனால்தான் அது அவர் சந்ததிக்குமில்லை என்பது. ஒருவகையில் அப்படி ரத்தாவதும் அனந்தம்.சித்தி ஒருவர் பெற்றால் அவர் சந்ததிகள் அனைவருக்கும் சித்தியின் வித்திருக்கும்.அதற்கு முடிவில்லை. அது அனந்தம்.

. சித்திக்கும், கேலிக்கும் அந்த அளவில் வித்தியாசமில்லை.

. இரண்டும் அனந்தம்.

. இராமாவதாரக் கர்மம் கிருஷ்ணாவதாரத்திற்கும் வந்தது.

. அதற்கு மாற்று நாமறிந்த ஆன்மீக மரபில், அவதாரப் புருஷனுக்கேயில்லை.

. அன்பர்கள் அனைவரும் பலமுறை கண்ட சக்தியிது.

. கேலியை மாற்றியது பெரியது, வளர்ந்தது மிகப்பெரியது.

. கேலிசெய்த மனிதன் (evil force) தீயவன். அவருக்காக வசூல் செய்தது 25 மடங்கு வளர்ந்தது எனில் கெட்ட எண்ணம் அதன்மூலம் 25 மடங்கு அதிக ஆன்மீகசக்தியால் அழிந்தது எனப் பொருள்.

. அந்த நிகழ்ச்சிக்குப்பின் தீயவனுடைய தீயசெயல்கள் எதுவும் பலிக்கவில்லை.

. பிறருக்கு அவர் செய்ய முயன்றனவெல்லாம் அவருக்கே நடந்தது.

. ஸ்தாபனத்திற்கு வெளியிலிருந்து வருபவரை ஸ்தாபனத்தில் விடாமல் தடுக்க முயன்றது பலிக்கவில்லை. ஸ்தாபனத்தில், நிர்வாகத் தலைமையிலிருந்த அவரை ஸ்தாபனம் வெளி- யேற்றியது. அவர் தன் செயலுக்கு மன்னிப்புக் கோரி உள்ளே வரவேண்டியதாயிற்று.

. அன்னை லோகத்தில், அன்பர்கள் வாழ்வில், இனி தீமை செயல்படமுடியாது. முயன்றால் அடி தீமையின் மீது விழும் என்று இந்நிகழ்ச்சி உலகுக்கு அறிவிக்கிறது.

**கேலி பிறரைப் புண்படுத்தும்**;

எவரையும் புண்படுத்தாமல் அனைவரையும் சிரிக்கவைக்கும் கேலியும் உண்டன்றோ?

Humour, ஹாஸ்யம் பிறரைச் சந்தோஷப்படுத்த முனைகிறது. கேலி, வெறியேற்றுவது பிறரைப் புண்படுத்த முனைகிறது. நம் சந்தோஷம் பிறரைச் சந்தோஷப்படுத்துகிறது. Ecstasy பூரிப்பு நம் சந்தோஷத்தின் உச்சக்கட்டம்.

. ‘‘இறைவன் பூரிப்பைக் கொடுத்தாலும், நாம் அதை நமக்குரியது போல் மாற்றினால் அது பாக்டரியாகும், வெறும் பூரியுமாகும்.

. ‘‘இந்த மாற்றமும் இருவகைகளாகும். உயர்ந்த பூரிப்பு, சாப்பிடும் பூரியாகலாம்.

. ‘‘அதுவே ஆனந்தம் வெளிப்படும் பூரியானால், அதை சாப்பிடுபவருக்கு மரணமில்லை. அது சச்சிதானந்தப் பூரிப்பாகும்.

. ‘‘அதுவே ஸ்ரீ அரவிந்தம் கூறும் மூன்றாம் காலம், மூன்றாம் நிலை.